# சாரல்

# தமிழ் இலக்கிய தகவல்கள்

## தமிழ் மொழிக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றவர்கள்

**சாகித்திய அகாதமி**

- சாகித்திய அகாதமி இந்திய அரசினால், **மார்ச் 12, 1954ல்** துவக்கப்பட்ட ஓர் அமைப்பு. இந்திய மொழிகளில் இலக்கியமும் இலக்கியம் சார்ந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் எண்ணத்தோடு துவக்கப்பட்ட அமைப்பு, சாகித்ய அகாதமி. இதுவரை ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட இலக்கிய கூட்டங்களும், பயிற்சி முகாம்களும் மற்ற பிற இலக்கியம் சார்ந்த நடவடிக்கைகளை நடத்தியுள்ளது சாகித்ய அகாதமி.
- இந்திய மொழிகளில் வெளிவரும் சிறந்த படைப்புகளை பிற மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடுவது, சிறந்த படைப்புகளை விருது அளித்து ஊக்கப்படுத்துவது போன்ற பல பணிகளை செய்வது சாகித்ய அகாதமி.
- சாகித்திய அகாதமி விருது சிறந்த இந்திய இலக்கிய படைப்பாளிகளுக்கு, இந்திய அரசால் ஒவ்வோர் ஆண்டும் தேசிய அளவிலும் மாநில அளவிலும் வழங்கப்படும் மதிப்பிற்குரிய விருதாகும். பரிசுத்தொகையாக ரூ.1,00,000 மும், ஒரு விருதும் வழங்கப்படுகிறது. இருபத்து நான்கு இந்திய மொழிகளில் வெளிவரும சிறுகதை, நாவல், இலக்கிய விமர்சனம் போன்ற பலவகையான எழுத்தாக்கத்திற்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

**சாகித்திய அகாதமி விருது பெற்ற நூலாசிரியர்கள் மற்றும் நூல்கள்**

| வ. எ | எழுத்தாளர்கள் | நூல்கள் | ஆண்டு | |
|---|---|---|---|---|
| 1. | R.P. சேதுப்பிள்ளை | தமிழ் இன்பம் | 1955 | கட்டுரை |
| 2. | கல்கி கிருஷ்ணமூர்த்தி | அலையோசை | 1956 | நாவல் |
| 3. | சி. ராஜகோபாலச்சாரி | சக்ரவர்த்தி திருமகன் | 1958 | ராமாயணம் |
| 4. | மு. வரதராஜன் | அகல் விளக்கு | 1961 | நாவல் |
| 5. | சோமசுந்தரம் | அக்கரைச்சீமையில் | 1962 | பயண நூல் |
| 6. | அகிலன் | வேங்கையின் மைந்தன் | 1963 | நாவல் |
| 7. | பி. ஸ்ரீ ஆச்சார்யா | ஸ்ரீ ராமாநுஜர் | 1965 | சுயசரிதை |
| 8. | மா. பொ. சி. | வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு | 1966 | சுயசரிதை |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | கே.வி. ஜெகன்நாதன் | வீரர் உலகம் | 1967 | இலக்கியம் |
| 10. | எ. ஸ்ரீனிவாச ராகவன் | வெள்ளை பறவை | 1968 | கவிதை |
| 11. | பாரதிதாசன் | பிசிராந்தையார் | 1969 | நாடகம் |
| 12. | கு. அழகிரிசாமி | அன்பளிப்பு | 1970 | சிறுகதைகளின் தொகுப்பு |
| 13. | நா. பார்த்தசாரதி | சமுதாய வீதி | 1971 | நாவல் |
| 14. | ஜெயகாந்தன் | சில நேரங்களில் சில மனிதர்கள் | 1972 | நாவல் |
| 15. | ராஜம் கிருஷ்ணன் | வேருக்கு நீர் | 1973 | நாவல் |
| 16. | கே.டி. திருநாவுக்கரசு | திருக்குறள் நீதி இலக்கியம் | 1974 | இலக்கியம் |
| 17. | ஆர்.தண்டாயுதம் | தற்கால தமிழ் இலக்கியம் | 1975 | இலக்கியம் |
| 18. | இந்திரா பார்த்தசாரதி | குருதிப்புனல் | 1977 | நாவல் |
| 19. | வல்லிக்கண்ணன் | புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் | 1978 | திறனாய்வு |
| 20. | ஜனாகிராமன்.தி | சக்தி வைத்தியம் | 1979 | சிறுகதைகள் |
| 21. | கண்ணதாசன் | சேரமான்காதலி | 1980 | நாவல் |
| 22. | எம். ராமலிங்கம் | புதிய உரை நடை | 1981 | திறனாய்வு |
| 23. | பி.எஸ். ராமையா | மணிக்கொடிக்காலம் | 1982 | இலக்கிய வரலாறு |
| 24. | டி.எம்.சிதம்பரம் ரகுநாதன் | பாரதி: காலமும் கருத்தும் | 1983 | திறனாய்வு |
| 25. | இலட்சுமி திரிபுரசுந்தரி | ஒரு காவேரியை போல | 1984 | நாவல் |
| 26. | எ.எஸ். ஞானசம்பந்தன் | கம்பன்: புதிய பார்வை | 1985 | திறனாய்வு |
| 27. | கா.நா. சுப்பிரமனியம் | இலக்கியத்துக்கு ஒரு இலக்கியம் | 1986 | திறனாய்வு |
| 28. | ஆதவன் சுந்தரம் | முதலில் இரவு வரும் | 1987 | சிறுகதை |
| 29. | வி.சி.குழந்தைசாமி | வாழும் வள்ளுவம் | 1988 | திறனாய்வு |
| 30. | லா சா ரா | சிந்தாநதி | 1989 | சுயசரிதை |
| 31. | சு. சமுத்திரம் | வேரில் பழுத்த பலா | 1990 | நாவல் |
| 32. | கி.ராஜநாராயணன் | கோபல்லபுறத்து மக்கள் | 1991 | நாவல் |
| 33. | கோவை.மணிசேகரன் | குற்றாலகுறிஞ்சி | 1992 | வரலாற்று புதினம் |
| 34. | எம்.வி. வெங்கடேசன் | காதுகள் | 1993 | நாவல் |
| 35. | பொன்னீலன் | புதிய தரிசனங்கள் | 1994 | நாவல் |
| 36. | பிரபஞ்சன் | வானம் வசப்படும் | 1995 | நாவல் |
| 37. | அசோக மித்திரன் | அப்பாவின் சிநேகிதர் | 1996 | சிறுகதை |

| | | | | |
|---|---|---|---|---|
| 38. | தோப்பில் முகமது மீரான் | சாய்வு நாற்காலி | 1997 | நாவல் |
| 39. | சா.கந்தசாமி | விசாரணை கமிஷன் | 1998 | நாவல் |
| 40. | எஸ். அப்துல் இரஹ்மான் | ஆலாபனை | 1999 | கவிதை |
| 41. | தி.கா. சிவசங்கரன் | விமர்சனங்கள் மதிப்புரைகள் பேட்டிகள் | 2000 | திறனாய்வு |
| 42. | சி.எஸ்.செல்லப்பா | சுதந்திர தாகம் | 2001 | நாவல் |
| 43. | சிற்பி பாலசுப்ரமணியம் | ஒரு கிராமத்து நதி | 2002 | சிறுகதை |
| 44. | வைரமுத்து | கள்ளிக்காட்டு இதிகாசம் | 2003 | நாவல் |
| 45. | தமிழன்பன் | வணக்கம் வள்ளுவ | 2004 | கவிதை |
| 46. | ஜி.திலகவதி | கல்மரம் | 2005 | நாவல் |
| 47. | மு.மேத்தா | ஆகாயத்துக்கு அடுத்தவீடு | 2006 | கவிதை |
| 48. | நீலபத்மநாபன் | இலையுதிர் காலம் | 2007 | நாவல் |
| 49. | மேலாண்மை பொன்னுசாமி | மின்சாரப்பூ | 2008 | சிறுகதை |
| 50. | பூவரசு | கையொப்பம் | 2009 | கவிதை |
| 51. | நாஞ்சில் நாடன் | சூடிய பூ சூடர்க்க | 2010 | சிறுகதை |
| 52. | சு. வெங்கடேசன் | காவல் கோட்டம் | 2011 | நாவல் |
| 53. | டி.செல்வராஜ் | தோல் | 2012 | நாவல் |
| 54. | ஜோடி குரூஸ் | கொற்கை | 2013 | நாவல் |
| 55. | பூமணி | அஞ்ஞாடி | 2014 | நாவல் |
| 56 | எ. மாதவன் | இலக்கியச் சுவடுகள் | 2015 | கட்டுரை |
| 57. | வண்ணதாசன் | ஒரு சிறு இசை | 2016 | சிறுகதை |
| 58 | இன்குலாப் | காந்தள் நாட்கள் | 2017 | கவிதை |
| 59 | எஸ். ராமகிருஷ்ணன் | சஞ்சாரம் | 2018 | நாவல் |
| 60 | சோ. தர்மன் | சூல் | 2019 | நாவல் |
| 61 | இமையம் | செல்லாத பணம் | 2020 | நாவல் |

- நூலகப் பயன்பாட்டிற்கான விதிகளை உருவாக்கித் தந்த **<u>சீர்காழி சீ.இரா. அரங்கநாதன்</u>**, **<u>இந்திய நூலகத் தந்தை</u>** எனப் போற்றப்படுகிறார்.

| தமிழகத்திலுள்ள மிகப் பழைமையான நூலகங்கள் | | |
|---|---|---|
| சரசுவதி மகால் நூலகம் | - | தஞ்சை (1820) |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம் | - | சென்னை (1869) |

| | | |
|---|---|---|
| கன்னிமாரா நூலகம் | - | சென்னை (1869) |
| சென்னைப் பல்கலைக்கழக நூலகம் | - | 1907 |
| அண்ணாமலை பல்கலைக்கழக நூலகம் | - | சிதம்பரம் (1929) |
| டாக்டர் உ.வே.சா நூலகம் | - | சென்னை (1947) |
| மறைமலை அடிகளார் நூலகம் | - | சென்னை (1958) |
| மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலகம் | - | 1966 |
| உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன நூலகம் | - | சென்னை (1970) |
| தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழக நூலகம் | - | 1981 |

## அறிஞர்கள் பிறந்த ஊர்கள்

| பெயர் | ஊர் | பெயர் | ஊர் |
|---|---|---|---|
| நாமக்கல் கவிஞர் | மோகனூர் (சேலம்) | பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார் | செங்கபடுத்தான் காடு |
| ஜெயங்கொண்டார் | தீபங்குடி | உ.வே.சா | உத்தமதான புரம் |
| ஆதிசங்கரர் | காலடி (கேரளா) | உடுமலை நாராயணக்கவி | கூலைவாடி |
| அண்ணாமலை ரெட்டியார் (நெல்லை) | சென்னிகுளம் | திரு.வி.க | துள்ளம் (தண்டலம்) |
| தில்லையாடி வள்ளியம்மை | ஜோகன்ஸ்பர்க் | ஜீவானந்தம் | கன்னியாகுமரி |
| மாணிக்கவாசகர் | திருவாதவூர் | தேவநேயப்பாவணர் | சங்கரன் கோவில் |
| உமறுப்புலவர் | நாகலாபுரம் (தூத்துக்குடி) | பாரதிதாசன் | புதுச்சேரி |
| நம்மாழ்வார் | திருக்குருகூர் | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் | எண்ணெய் கிராமம் |
| ராமானுஜர் | ஸ்ரீபெரும்புதூர் | புலித்தேவன் | நெற்கட்டும் சேவல் |
| சேக்கிழார் | குன்றத்தூர் | கட்டப்பொம்மன் | பாஞ்சாலங்குறிச்சி |
| எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை | திருநெல்வேலி | இராமலிங்க அடிகள் | மருதூர் |
| திருஞானசம்பந்தர் | சீர்காழி | கால்டுவெல் | அயர்லாந்து |
| மத்துவாச்சாரியார் | உடுப்பி (கர்நாடகம்) | கண்ணதாசன் | சிறுகூடல்பட்டி (சிவகங்கை) |
| வீரமாமுனிவர் | காஸ்திகிலியோன் | ஜி.யூ.போப் | எட்வர்ட் தீவு |
| அறிஞர் அண்ணா | காஞ்சிபுரம் | தாயுமானவர் | திருமறைக்காடு (வேதாரண்யம்) |

APOLLO STUDY CENTRE

| | | | |
|---|---|---|---|
| மருதகாசி | மேலக்குடிக்காடு | கலைஞர் | திருக்குவளை (திருவாதவூர்) |
| பாரதியார் | எட்டயபுரம் | தத்துவப் போதகர் | இத்தாலி |
| முடியரசுன் | பெரியகுளம் | திருநாவுக்கரசர் | திருவாமூர் |
| கம்பர் | தேரெழுந்தூர் | ராஜாஜி | தொரப்பள்ளி |
| பாவலரேறு பெருஞ்சித்திரனார் | சமுத்திரம் (சேலம்) | எம்.ஜி.ஆர். | கண்டி (இலங்கை) |
| ஜெயலலிதா | மேலக்கோட்டை (கர்நாடகா) | பெரியார் | ஈரோடு |
| சுரதா | பழையனூர் | நா.காமராசன் | போடி |
| விஜயராகவாச்சாரியார் | சேலம் | சுந்தரர் | திருநாவலூர் |
| அப்துல்கலாம் | இராமேஸ்வரம் | யூசப்கான் (மருதநாயகம்) | பனையூர் |
| கவிமணி | தேரூர் | தாராபாரதி | குவளை (திருவண்ணாமலை) |
| சிற்பிபாலசுப்பிரமணியன் | ஆத்துப்பொள்ளாச்சி | முத்துராமலிங்கத் தேவர் | பசும்பொன் |
| வாணிதாசன் | வில்லியனூர் | சுவாமி நாதன் | கும்பகோணம் |
| ஊமைத்துரை | பாஞ்சாலங்குறிச்சி | மருது சகோதரர்கள் | முக்குளம் (அருப்புக்கோட்டை) |
| பாண்டித்துரைத்தேவர் | இராமநாதபுரம் | சத்தியமூர்த்தி | திருமயம் (புதுக்கோட்டை) |
| செண்பகராமன் பிள்ளை | திருவனந்தபுரம் | தி.சொ.வேணுகோபாலன் | திருவையாறு |
| அசலாம்பிகை | இரட்டனை (திண்டிவனம்) | வ.உ. சிதம்பரனார் | ஒட்டப்பிடாரம் |
| டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி | புதுக்கோட்டை | வில்லிபுத்தூரார் | சனியூர் |
| சி.சு. செல்லப்பா | சின்னமனூர் (தேனி) | வேலுநாச்சியார் | சிவகங்கை |
| அருணகிரியார் | திருவண்ணாமலை | சி.இலக்குவனார் | வாய்மை மேடு (நாகை) |
| சுப்பிரமணியசிவா | வத்தலக்குண்டு | அஞ்சலையம்மாள் | கடலூர் |

| | | | |
|---|---|---|---|
| வ.வே.சு.ஐயர் | வரகனேரி (திருச்சி) | காமராசர் | விருதுநகர் |
| தீரன் சின்னமாலை | மேலப்பாளையம் (ஈரோடு) | கெலன் கெல்லர் | துங்கும்பியா |
| தெ.பொ.மீனாட்சி சுந்தரம் | சிந்தாதரி பேட்டை | அம்பேத்கார் | அம்பாவாடே |
| புதுமைபித்தன் | திருநெல்வேலி | திருப்பூர் குமரன் | சென்னிமலை (அவிநாசி) |
| மறைமலையடிகள் | கடம்பாடி | நா.மு. வேங்கடசாமி நாட்டார் | நடுக்காவேரி (தஞ்சை |
| ந.பிச்சமூர்த்தி | கும்பகோணம் | சாலை இளந்திரையன் | சாலைப்பள்ளிவாசல் |
| ரா.பி. சேதுபிள்ளை | இராஜவல்லிபுரம் | அப்துல் ரகுமான் | மதுரை |
| பரிதிமாற்கலைஞர் | விளச்சேரி | ஈரோடு தமிழன்பன் | சென்னிமலை |
| வண்ணதாசன் | திருநெல்வேலி | மு. மேத்தா | பெரியகுளம் |
| பொய்கை ஆழ்வார் | திருவெ∴கா (காஞ்சிபுரம்) | லவோட்ஸ் | சீனா |
| பூதத்தாழ்வார் | மாமல்லபுரம் | சு. வில்வரத்தினம் | புங்குடுத்தீவு (யாழ்ப்பாணம்-இலங்கை) |
| சோமு | ஆலங்குடி (சிவகங்கை மாவட்டம்) | அ. முத்துலிங்கம் | கொக்குவில் கிராமம் (யாழ்ப்பாணம்-இலங்கை) |
| திரு.வி.கலியாண சுந்தரனார் | திருவாரூர் | அழகிய பெரியவன் | பேரணாம்பேட்டை (வேலூர்) |
| சீரங்கராயன் சிவக்குமார் | கன்னிவாடி (திருப்பூர் மாவட்டம்) | சிவராமலிங்கம் (பிரமிள்) | இலங்கை |
| தமிழ் ஒளி | புதுவை | ஆபிரகாம் பண்டிதர் | சாம்பவர் வடகரை (தென்காசி) |
| வைரமுத்து | வடுகபட்டி (தேனி மாவட்டம்) | சி.வை.தாமோதரனார் | யாழ்ப்பாணம் (இலங்கை) |
| ப. சிங்காரம் | சிங்கம்புணரி (சிவகங்கை) | பேராசிரியர் சுந்தரனார் | ஆலப்புழை (திருவிதாங்கூர்) |
| கு.பா. ராஜகோபாலன் | கும்பகோணம் | ஜலாலுத்தீன் ரூமி | ஆப்கானிஸ்தான் |

- தாயுமானவர் - விஜயசொக்கநாத நாயக்கர் (திருச்சி)
- கம்பர் - 2-ம் குலோத்துங்கச் சோழன்
- கோவூர் கிழார் - நலங்கிள்ளி
- புகழேந்தி - வரகுணப்பாண்டியன்
- கண்ணனார் - கோப்பெருஞ்சோழன்
- மோசிகீரணார் - சேரலிரும்பொறை
- பிசிராந்தையார் - கோப்பெருஞ்சோழன்
- சேக்கிழார் - அநாபயச் சோழன்
- ஒட்டக்கூத்தர் - 2ம் குலோத்துங்கச் சோழன்
- மாணிக்கவாசகர் - அரிமர்த்தன பாண்டியன்
- உமறுப்புலவர் - எட்டையபுர மன்னன்
- ஔவையார் - பாரி
- ஜெயங்கொண்டார் - முதல் குலோத்துங்கச்சோழன்
- பொய்கையார் - கனைக்கால் சேரலிரும்பொறை
- நக்கீரர் - சூடாமணிப்பாண்டியன்

❖ **சமகாலத்தவர்**

- இளங்கோவடிகளும், சீத்தலைச்சாத்தனாரும்
- பாரதியார், பாரதிதாசன்
- கபிலரும், பரணரும்
- அப்பர், சம்பந்தர், சுந்தரர்
- கம்பர், ஒட்டக்கூத்தர், ஜெயங்கொண்டார், புகழேந்தி
- காரியாசனும். கணிமேதாவியாரும்
- மகேந்திரவர்மபல்லவர். திருநாவுக்கரசர்
- பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்
- கூன் பாண்டியன், திருஞானசம்பந்தர்

❖ **புலவர்களை ஆதரித்த வள்ளல்கள்**

- கபிலர் - பாரி
- புகழேந்திப் புலவர் - சந்திரன் சுவர்க்கி
- பெருஞ்சித்திரனார் - குமணவள்ளல்
- வில்லிபுத்தூரார் - வக்கபாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான்
- கம்பர் - சடையப்பவள்ளல்
- உமறுப்புலவர் - வள்ளல் சீதக்காதி, அபுல்காசிம்
- ஔவையார் - அதியமான்

## புலவர்கள், அறிஞர்கள் தலைவர்கள் காலம்

| பெயர் | காலம் | பெயர் | காலம் |
|---|---|---|---|
| இளங்கோவடிகள் | 2-ம் நூற்றாண்டு | மறைமலையடிகள் | 1876-1950 |

APOLLO STUDY CENTRE

| | | | |
|---|---|---|---|
| சீத்தலைச்சாத்தனார் | 2-ம் நூற்றாண்டு | சோமசுந்தர பாரதியார் | 1879–1959 |
| திருமூலர் | 5-ம் நூற்றாண்டு | காந்தி | 1869-1948 |
| திருநாவுக்கரசர் | 7-ம் நூற்றாண்டு | பெரியார் | 1879-1973 |
| திருஞானசம்பந்தர் | 7-ம் நூற்றாண்டு | பாரதியார் | 1882-1921 |
| சுந்தரர் | 7-ம் நூற்றாண்டு | திரு.வி.க | 1883-1953 |
| குலசேகர ஆழ்வார் | 8-ம் நூற்றாண்டு | உ.வே.சா | 1855-1942 |
| மாணிக்கவாசகர் | 9-ம் நூற்றாண்டு | இராமலிங்கனார் | 1888-1972 |
| திருத்தக்கத்தேவர் | 9-ம் நூற்றாண்டு | நேரு | 1889-1964 |
| ஓட்டக்கூத்தர் | 12-ம் நூற்றாண்டு | அம்பேத்கர் | 1891-1956 |
| புகழேந்திப்புலவர் | 12-ம் நூற்றாண்டு | பாரதிதாசன் | 1891-1964 |
| சேக்கிழார் | 12-ம் நூற்றாண்டு | பாஸ்கரதாஸ் | 1892-1952 |
| ஜெயங்கொண்டார் | 12-ம் நூற்றாண்டு | பிச்சமூர்த்தி | 1900-1976 |
| கம்பர் | 12-ம் நூற்றாண்டு | காமராசர் | 1903-1976 |
| வில்லிபுத்தூரார் | 14-ம் நூற்றாண்டு | ம.பொ.சிவஞானம் | 1906-1995 |
| உமறுப்புலவர் | 17-ம் நூற்றாண்டு | தேவர் | 1908-1963 |

| | | | |
|---|---|---|---|
| குமரகுருபரர் | 17-ம் நூற்றாண்டு | அண்ணா | 1909-1969 |
| வீரராகவர் | 17-ம் நூற்றாண்டு | வாணிதாசன் | 1915-1974 |
| பரஞ்சோதி முனிவர் | 17-ஆம் நூற்றாண்டு | எம்.ஜி.ஆர் | 1917-1987 |
| தாயுமானவர் | 18-ம் நூற்றாண்டு | மருதகாசி | 1920-1989 |
| பெரியவன் கவிராயர் | 18-ஆம் நூற்றாண்டு | முடியரசன் | 1920-1998 |
| அழகிய சொக்கநாத புலவர் | 19-ம் நூற்றாண்டு | சுரதா | 1921-2006 |
| வீரமாமுனிவர் | 1680-1747 | தமிழ் ஒளி | 1924-1965 |
| மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் | 1815-1876 | கண்ணதாசன் | 1927-1981 |
| ஜி.யு.போப் | 1820-1908 | இளந்திரையன் | 1930 |
| வள்ளலார் | 1823-1874 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | 1930-1959 |
| மாயூரம் வேதநாயகம் | 1826-1889 | பெருஞ்சித்திரனார் | 1933-1995 |
| எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை | 1827-1900 | சிற்பி | 1936 |
| சி.வை. தாமோதரனார் | 1832–1901 | அப்துல் ரகுமான் | 1937 |
| அண்ணமலையார் | 1861-1890 | மீரா | 1938 |
| சங்கரதாசு சுவாமிகள் | 1867-1922 | கருணாநிதி | 1939 |
| செய்குதம்பிப் பாவலர் | 1874–1950 | தாராபாரதி | 1947-2000 |

# இயற்பெயர்கள் மற்றும் புனைப்பெயர்கள்

| புனைப்பெயர் | இயற்பெயர் | புனைப்பெயர் | இயற்பெயர் |
|---|---|---|---|
| **பாரதியார்** | சுப்பிரமணியம் (எ) சுப்பையா | **பெரியாழ்வார்** | விஷ்ணுசித்தர் |
| **பாரதிதாசன்** | கனக சுப்புரத்தினம் | **தொண்டரடிப் பொடியாழ்வார்** | விப்ரநாராயணர் |
| **முடியரசன்** | துரைராசு | **நம்மாழ்வார்** | மாறன் |
| **சுரதா (சுப்புரத்தின தாசன்)** | ராஜகோபாலன் | **ஆண்டாள்** | கோதை |
| **வாணிதாசன்** | எத்திராசலு | **காரைக்கால் அம்மையார்** | புனிதவதியார் |
| **மறைமலையடிகள்** | வேதாச்சலம் | **திருநாவுக்கரசர்** | மருள் நீக்கியார் |
| **பெருஞ்சித்திரனார்** | துரைமாணிக்கம் | **திருஞான சம்பந்தர்** | ஆளுடைபிள்ளை |
| **வண்ணதாசன்** | கல்யாண சுந்தரம் | **சுந்தரர்** | நம்பி யாரூரர் |
| **கண்ணதாசன்** | முத்தையா | **சேக்கிழார்** | அருள் மொழித்தேவர் |
| **உ.வே.சா.** | வேங்கடரத்தினம் | **தத்துவப்போதகர்** | இராபர்ட்-டி-நொபிலி |
| **கவிமணி** | தேசிய விநாயகம்பிள்ளை | **வீரமாமுனிவர்** | கான்ஸ்டான்டைன் ஜோசப் பெஸ்கி |
| **காளமேகப்புலர்** | வரதன் (ஆசுக்கவி) | **விவேகானந்தர்** | நரேந்திரநாத் தத்தா |
| **வள்ளலார்** | ராமலிங்கம் | **அம்பேத்கர்** | பீமாராவ் ராம்ஜி |
| **நாமக்கல் கவிஞர்** | ராமலிங்கம் பிள்ளை | **பெரியார்** | ராமசாமி |
| **பரிதிமாற்கலைஞர்** | சூரிய நாராயண சாஸ்திரிகள் | **இந்திரா காந்தி** | இந்திரா பிரியதர்ஷினி |
| **அகிலன்** | அகிலாண்டம் | **சாவி** | சா. விஸ்வநாதன் |
| **மீரா** | மீ. இராஜேந்திரன் | **சாண்டில்யன்** | பாஷ்யம் |
| **சுரதா** | இராஜகோபாலன் | **சுவாமிநாத தேசிகர்** | ஈசான தேசிகர் |
| **மௌனி** | மணி | **பசுவய்யா** | சுந்தரராமசாமி |

| | | | |
|---|---|---|---|
| **சுஜாதா** | ரங்கராஜன் | **ஞானக்கூத்தன்** | அரங்கநாதன் |
| **புதுமைப்பித்தன்** | விருத்தாச்சலம் | **நா.பிச்சமூர்த்தி** | வேங்கடமகாலிங்கம் |
| **கல்கி** | ரா. கிருஷ்ணமூர்த்தி | **தேவதேவன்** | பிச்சுமணி |
| **சாலை இளந்திரையன்** | மகாலிங்கம் | **வாலி** | இரங்கநாதன் |
| **சாலினி இளந்திரையன்** | கனக சவுந்தரி | **சி.மணி** | எஸ். பழனிசாமி |
| **கலாப்பிரியா** | சோமசுந்தரம் | **புலமைபித்தன்** | இராமசாமி |
| **அயோத்தியதாசர்** | காத்தவராயன் | **சீத்தலைச்சாத்தனார்** | சாத்தன் |
| **குணங்குடி மஸ்தான் சாகிபு** | சுல்தான் அப்துல்காதர் | **சந்தக்கவிமணி தமிழழகனார்** | சண்முகசுந்தரம் |
| **இறையரசன்** | சே. சேசுராசா | **நாகூர் ரூமி** | முகம்மது ர.ஃ.பி |
| **கோமகள்** | இராஜலட்சுமி | **இந்திரன்** | இராசேந்திரன் |
| **கந்தர்வன்** | நாகலிங்கம் | **அழகிய பெரியவன்** | அரவிந்தன் |
| **பரிதிமாற்கலைஞர்** | சூரியநாராயண சாஸ்திரி | **பிரமிள்** | சிவராமலிங்கம் |

<u>**புலவர்களின் பெற்றோர் பெயர்**</u>

| **புலவர் பெயர்** | **பெற்றோர் பெயர்** | **புலவர் பெயர்** | **பெற்றோர் பெயர்** |
|---|---|---|---|
| **இளங்கோவடிகள்** | இமயவர்மன் நெடுஞ்சேரலாதன்/ நற்சோனை | **மாணிக்கவாசகர்** | சம்புபாதசாரியார் / சிவஞானவதி |
| **முடியரசன்** | சுப்பராயலு/ சீதாலெட்சுமி | **பெருஞ்சித்திரனார்** | துரைசாமி/ குஞ்சம்மாள் |
| **இளந்திரையன்** | ராமைய்யா/ அன்னலெட்சுமி | **சுரதா** | திருவேங்கடம்/ செண்பகம் |
| **இராமலிங்கனார்** | வெங்கட்ராமன்/ | **அண்ணாமலையார்** | சென்னவர்/ |

| | | | |
|---|---|---|---|
| | அம்மணி அம்மாள் | | ஓவுஅம்மாள் |
| **கம்பர்** | ஆதித்தர் | **தேசிக விநாயகம் பிள்ளை** | சிவதானு/ ஆதிலெட்சுமி |
| **கண்ணதாசன்** | சாத்தப்பன்/ விசாலாட்சி | **குமரகுருபரர்** | சண்முகசிகாமணி கவிராயர்/ சிவகாமிசுந்தரி |
| **வாணிதாசன்** | திருக்காமு/ துளசியர் | **எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை** | சங்கரநாரயணன் / தேவநாயகி |
| **வில்லிபுத்தூரர்** | வீரராகவர் | **சுவாமி நாத தேசிகர்** | தாண்டவமூர்த்தி |
| **பாரதிதாசன்** | கனகசபை/ இலக்குமி | **சுந்தரர்** | சடையனார்/ இசைஞானியார் |
| **பரஞ்சோதி முனிவர்** | மீனாட்சி/ சுந்தரதேசிகர் | **சிற்பி** | பொன்னுசாமி/ கண்டியம்மாள் |
| **தாராபாரதி** | துரைச்சாமி/ புஷ்பம் | **கருணாநிதி** | நடேசன்/ சிவகாமியம்மாள் |
| **மருதகாசி** | ஐய்யம்பெருமாள்/ மிளகாயி | **பாரதியார்** | சின்னச்சாமி/ இலக்குமி |
| **திரு.வி.க** | விருதாச்சலம்/ சின்னம்மை | **வள்ளலார்** | ராமையாபிள்ளை / சின்னம்மையார் |
| **காமராசன்** | நாச்சிமுத்து/ இலெட்சுமி | **தாயுமானவர்** | கேடிலியப்பர்/ கெஜவல்லி |

❖ **<u>தமிழ் பத்திரிக்கைகள் மற்றும் ஆசிரியர்கள் (உதவி ஆசிரியர்)</u>**

- சுதேசமித்திரன் - சி.சுப்பிரமணிய ஐயர்
- இந்தியா, விஜயா (பாலபாரத் ஆங்கிலம்) - பாரதியார்
- தி ஹிந்து - எஸ். சுப்பிரமணிய ஐயர்
- நவசக்தி, தேசபக்தன் - திரு.விக.

- தென்றல், முல்லை - கண்ணதாசன்
- குயில், பொன்னி - பாரதிதாசன்
- பாலபாரதி - வா.வே.சு. ஐயர்
- தமிழ்நாடு - வரதராசலு நாயுடு
- விமோசனம், சுயராஜ்யம் - இராஜாஜி
- திராவிட நாடு - அண்ணா
- பிரபஞ்சமித்திரன், இந்தியதேசாந்திரி - சுப்பிரமணியசிவா
- மணிக்கொடி - பி.எஸ்.ராமையா
- எழுத்து, சுதந்திரச்சங்கு - சி.சு. செல்லப்பா
- குடியரசு, விடுதலை, ரிவோல்ட் - பெரியார்
- சாவி - சா.விஸ்வநாதன்
- கல்கி - ரா.கிருஷ்ணமூர்த்தி
- செங்கோல் - மா.பொ.சி.
- பாரதி - வ.உ.சி.
- லோகமித்திரன் - நாமக்கல் கவிஞர்
- காவியம் - சுரதா
- மனிதவீறு - சாலினி இளந்திரையன்
- ஞான சாகரம் - மறைமலையடிகள்
- சங்க இலக்கியம், இலக்கியம் - சி. இலகுவனார்
- தினத்தந்தி பத்திரிக்கை வெளிவந்த ஆண்டு - 1944

❖ **முதலில் தோன்றிய நூல், காப்பியங்கள் மற்றும் மிகப்பெரியவை/சிறியவை, நூல்களின் சிறப்புகள்**

- **மகாபாரதம்** : உலக காப்பியங்களுள் மிகப் பெரியது
- **குறிஞ்சிப்பாட்டு** : 99 மலர்களின் பெயர் இடம் பெற்ற நூல்
- **பதிற்றுப்பத்து** : சேர வரலாற்றுப் பெட்டகம் இடம் பெற்ற நூல்
- **புறநானூறு** : தமிழர்களின் வரலாற்றுக் களஞ்சியம் என்றழைக்கப்படும் நூல்
- **குளத்தங்கரை அரச மரம் சொன்னக் கதை** : தமிழின் முதல் சிறுகதை
- **பிரதாப முதலியார் சரித்திரம்** : தமிழில் தோன்றிய முதல் புதினம்
- **அகத்தியம்** : மூன்று சங்கங்களிலும் இடம் பெற்ற ஒரே நூல்
- **சித்திரப்பாவை** : முதன்முதலில் ஞானபீட பரிசுபெற்ற தமிழர் அகிலன் (1975)
- **சதுரகராதி** : தமிழில் தோன்றிய முதல் அகராதி (1732)
- **குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்** : தமிழில் தோன்றிய முதல் பிள்ளைத்தமிழ்
- **தமிழ் இன்பம்** : சாகித்ய அகாடமி பரிசு பெற்ற முதல் தமிழ் நூல் (1955)
- **பதிற்றுப்பத்து** : சேர அரசர்களைப் பற்றி மட்டுமே பாடிய எட்டுத்தொகை நூல்
- **திருமந்திரம்** : அன்பே சிவம் என்பதை உணர்த்தும் நூல்
- **இரணியவதைப்பரணி** : வைணவப்பரணி என்றழைக்கப்படும்.

- **மணிமேகலை** : தமிழில் முதல் சமயக்காப்பியம்
- **திருப்பாவை, திருவெம்பாவை** : இரட்டைப்பாவைப் பாடல்கள்
- **சிவஞானபோதம்** : சைவ சித்தாந்த நூல்களின் தலைமை நூல்
- **நெஞ்சு விடுதூது** : தூது இலக்கிய வகையின் முதல் நூல்.
- **திருக்குற்றாலக் குறவஞ்சி** : குறவஞ்சி இலக்கியத்தின் முதல் நூல்
- **அற்புதத்திருவந்தாதி** : அந்தாதி இலக்கிய வகையின் முதல் அந்தாதி
- **சீவகசிந்தாமணி** : விருத்தப்பாவாலான முதல் காப்பியம்
- **வீரசோழியம்** : ஐந்திலக்கணத்திற்கும் விளக்கம் கூறும் நூல்
- **சாகுந்தலம்** : மறைமலையடிகள் மொழி பெயர்த்த நாடக நூல்
- **கள்வனின் காதலி** : கல்கியின் முதல் நாவல்
- **அகத்தியம்** : தொல்காப்பியத்தின் மூலநூல்
- **தேம்பாவணி** : கிறிஸ்துவசமயத்தின் தேவநூலான பைபிள் என்னும் விவிலியத்தை தழுவிப் பாடப்பட்டது
- **பெருங்காப்பியம்** : அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள்களையும் பாடும் பேரிலக்கியம்.
- **திருக்கயிலாய ஞான உலா** : தமிழில் தோன்றிய முதல் உலா நூல்

❖ பிற குறிப்புகள்

- **பாண்டித்துரைத் தேவர் (1901)** : மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின் தலைவர்
- **திரிகூடராசப்பக் கவிராயர்** : திருக்குற்றால நாத கோயில் வித்வான்
- **ஆண்டாள்** : பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள்
- **சேரன் செங்குட்டுவன்** : இளங்கோவடிகளின் அண்ணன்
- **கந்தசாமி** : நாடக மறுமலர்ச்சியின் தந்தை
- **ஜி.சுப்பிரமணிய ஐயர்** : தமிழ் இதழ்களின் தந்தை
- **வேதாச்சலம்** : மறைமலையடிகளின் இயற்பெயர்
- **அடியார்க்கு நல்லார்** : சிலப்பதிகார உரையாசிரியர்களில் ஒருவர்
- **தமிழ் பல்கலைக்கழகம்** : ராஜராஜசோழன் விருது வழங்கும் அமைப்பு
- **காமராஜர் பல்பலைக்கழகம்** : தமிழ்ச்செம்மல் விருது வழங்கும் அமைப்பு மதுரை
- **2004 அக்டோபர் 12** : தமிழில் செம்மொழி அந்தஸ்து பெற்றது
- **பக்தி இயக்க காலம்** : பல்லவர் காலத்தில் ஏற்பட்டது.
- **சண்முகானந்தா சபை** : டி.கே.எஸ். சகோதரர்கள் நிறுவிய நாடக சபை
- **குற்றாலம்** : தென்னாட்டு ஸ்பா
- **பாரியின் மகளிர்** : அங்கவை, சங்கவை
- **தருமசேனர்** :சமண சமயத்திலிருந்த போது திருநாவுக்கரசரின் பெயர்
- **சிவதனுசு** : சீதையை மணப்பதற்காக ராமன் ஒடித்த வில்லின் பெயர்
- **சிகன் பால்கு ஐயர்** : பைபிளை தமிழில் மொழிபெயர்த்தவர்
- **மயிலை நாதர்** : நன்னூலுக்கு உரை எழுதியவர்
- **தத்துவப்போதகரின் இயற்பெயர்** : இராபர்ட் டி நொபிலி (இத்தாலி)
- **மாறோக்கத்து நப்பசலையார்** : ஒரு பெண்பாற்புலவர்
- **பனூ அகமது மரைக்காயர்** : சின்னச்சீறா வை இயற்றியவர்
- **வரதன்** : காளமேகப்புலவரின் இயற்பெயர்

- **வா.வே.சு. ஐயர்** : தமிழ்ச் சிறுகதையின் தந்தை
- **திருக்கடைக்காப்பு** : திருஞானசம்பந்தர் பாடிய தேவாரத்தின் சிறப்புப்பெயர்.
- **புனிதவதியார்** : காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர்
- **கண்ணதாசன்** : காரைமுத்துப்புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியசாமி, கமகப்பிரியன்
- **இறையனார் அகப்பொருள் களவுரை** : சங்க காலத்தில் தமிழ்ச்சங்கங்கள் இருந்ததற்கான சான்று
- **கரிகாலன்** : வலங்கை, இடங்கை பாகுபாட்டைத் தோற்றுவித்த சோழமன்னர்
- **சுக்கு, மிளகு, திப்பிலி** : திரிகடுகத்தில் உள்ள மூன்று மருத்துவப் பொருள்கள்
- **ஐந்திணைகளின் கடவுள்கள்** : குறிஞ்சி – முருகன்,
  முல்லை – திருமால்
  மருதம் - இந்திரன்
  நெய்தல் - வருணன்
  பாலை - கொற்றவை
- **இளங்கோவடிகள்** : தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற்புலவன் என்று சாத்தனாரைப் புகழ்ந்து பாடியவர்
- **மூவருலா குறிக்கும் மன்னர்கள்** : விக்கிரம சோழன், இராஜராஜ சோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன்

APOLLO STUDY CENTRE

## தமிழ் ஒளிர் இடங்கள்

### தஞ்சை சரசுவதி மகால் நூலகம்

- இந்தியாவில் உள்ள தொன்மையான நூலகங்களுள் தஞ்சை சரசுவதி மகால் நூலகமும் ஒன்று. இந்நூலகம் கி.பி. (பொ.ஆ) **1122 முதல்** இயங்கி வருவதாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. இங்குத் தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச் சுவடிகளும் கையெழுத்துப் படிகளும் உள்ளன. தலைசிறந்த ஓவியங்களும் தொன்மையான இசைக் கருவிகளும் சிற்பங்களும் இங்கு இடம்பெற்றுள்ளன.

### தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர்

- செம்மொழியாகிய தமிழுக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் **தமிழக அரசால் கி.பி. (பொ.ஆ) 1981இல்** தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்ப்பல்கலைக்கழகம். இது தஞ்சாவூரில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. வானத்தில் இருந்து பார்க்கும் பொழுது "தமிழ்நாடு" எனத் தெரியும் வகையில் இதன் கட்டட அமைப்பு உள்ளது. இந்திய நாகரிகத்தின் பண்பாட்டுக் கூறுகள் அனைத்தையும் விரிவாகவும் ஆழமாகவும் ஆராய வேண்டும் என்பதே இப்பல்கலைக்கழகத்தின் நோக்கம்.

- இங்குக் கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப்புலம், மொழிப்புலம், அறிவியல்புலம் ஆகிய ஐந்து புலங்களும் இருபத்தைந்து துறைகளும் உள்ளன. இப்பல்கலைக்கழகம் தமிழ்மொழி ஆய்வுகள் செய்வது மட்டுமின்றி, சித்த மருத்துவத்துறை மூலம் பொதுமக்களுக்குப் பயனுள்ள வகையில் மருத்துவத் தொண்டு செய்து வருகிறது

### உ.வே.சா நூலகம் - சென்னை

- கி.பி. (பொ.ஆ.) 1942இல் தொடங்கப்பட்ட இந்நூலகத்தில் தமிழ், தெலுங்கு, வடமொழி உள்ளிட்ட பல்வேறு மொழி நூல்கள் உள்ளன. இங்கு 2128 ஓலைச்சுவடிகளும் 2941 தமிழ் நூல்களும் உள்ளன.

### கீழ்த்திசை நூலகம் - சென்னை

- இந்நூலகம் **கி.பி. (பொ.ஆ) 1869ஆம் ஆண்டு** தொடங்கப்பட்டது. இங்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச்சுவடிகள் உள்ளன. கணிதம், வானியல், மருத்துவம், வரலாறு உள்ளிட்ட பல்வேறு துறை நூல்களும் இடம்பெற்றுள்ளன. இது தற்போது அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஏழாம் தளத்தில் இயங்கி வருகின்றது.

### கன்னிமாரா நூலகம் - சென்னை

- **கி.பி. (பொ.ஆ) 1896இல்** தொடங்கப்பட்ட கன்னிமாரா நூலகம் தமிழ்நாட்டின் மைய நூலகம் ஆகும். இஃது இந்திய நாட்டின் களஞ்சிய நூலகங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. இந்நூலகத்தில் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. இந்தியாவில் வெளியிடப்படும் புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றின்

ஒரு பிரதி இங்குப் பாதுகாக்கப்படுகிறது. இந்நூலகத்தின் மூன்றாம் தளத்தில் **மறைமலை அடிகள் நூலகமும்** செயல்பட்டு வருகின்றது.

**வள்ளுவர் கோட்டம் - சென்னை**

- திருவள்ளுவரின் புகழை உலகறியச் செய்யும் வகையில் **சென்னைக் கோடம்பாக்கத்தில்** வள்ளுவர் கோட்டம் என்னும் கலைக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது, இதன் கட்டுமானப் பணிகள் கி.பி. (பொ.ஆ.) 1973 இல் தொடங்கி 1976ல் முடிக்கப்பட்டன. இது திருவாரூர்த் தேர் போன்ற வடிவில் அமைக்கப்பட்டு அதனை இரண்டு யானைகள் இழுத்துச் செல்வது போன்று கருங்கற்களால் உருவாக்கப்பட்டுள்ளது. வள்ளுவர் கோட்டத்தில் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான அரங்கம் ஒன்றும் உள்ளது. வள்ளுவர் கோட்டத்தில் 1330 குறட்பாக்களும் செதுக்கப்பட்டுள்ளன. **அறத்துப்பால் கருநிறப் பளிங்குக் கல்லிலும் பொருட்பால் வெண்ணிறப் பளிங்குக் கல்லிலும் இன்பத்துப்பால் செந்நிறப் பளிங்குக் கல்லிலும்** அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் திருக்குறளின் கருத்துகளை விளக்கும் ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன.

**திருவள்ளுவர் சிலை – கன்னியாகுமரி**

- இந்தியாவின் தெற்கு எல்லையாகிய கன்னியாகுமரியில் திருவள்ளுவரின் சிலை தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ளது. விவேகானந்தர் பாறைக்கு அருகில், கடல் நடுவே நீர் மட்டத்திலிருந்து முப்பது அடி உயரப் பாறை மீது இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. **கி.பி. (பொ.ஆ.) 1990ஆம் ஆண்டு இப்பணி தொடங்கியது. பொதுமக்கள் பார்வைக்காக 2000**ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் அன்று திறந்து வைக்கப்பட்டது. பாறையிலிருந்து **சிலையின் உயரம் மொத்தம் 133 அடி.** இது திருக்குறளின் மொத்த அதிகாரங்களை உணர்த்துவதுபோல் பீடம் முப்பத்தெட்டு அடி உயரம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. பொருட்பால், இன்பத்துப்பால் ஆகியவற்றின் மொத்த அதிகாரங்களைக் குறிக்கும் வகையில் சிலை தொண்ணூற்றைம்பது அடி உயரம் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது.

  பீடத்தின் உட்புறத்தில் மண்டபம் ஒன்று அமைந்துள்ளது. மண்டபத்தின் உட்சுவரில் அதிகாரத்திற்கு ஒரு குறள் வீதம் 133 குறட்பாக்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் செதுக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கு மூன்று டன் முதல் எட்டு டன் வரை உள்ள 3,681 கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திருவள்ளுவர் சிலை மொத்தம் ஏழாயிரம் டன் எடை கொண்டது. திருவள்ளுவர் சிலைக்குச் செல்வதற்குப் படகு வசதி செய்யப்பட்டுள்ளது.

**உலகத் தமிழ்ச் சங்கம் - மதுரை**

- மதுரை மாநகரின் தல்லாகுளம் பகுதியில் காந்தி அருங்காட்சியகம் அருகில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. இது சுமார் எண்பத்தேழு ஆயிரம் சதுர அடி பரப்பளவில் மனத்தைக் கவரும் வகையில் கட்டப்பட்டுள்ளது. **கி.பி. (பொ.ஆ) 1981-ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்படும்** என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி இக்கட்டடம் கட்டப்பட்டு கி.பி. (பொ.ஆ.) **2016 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது**. இதனுள் பன்னாட்டு அளவிலான கருத்தரங்கக் கூடங்கள், ஆய்வரங்கங்கள், நூலகம், பார்வையாளர் அரங்கம் ஆகியன கவினுற அமைக்கப்பட்டுள்ளன. வெளிப்புறச் சுற்றுச்சுவர்களில் 1330 குறட்பாக்களும் இடம்பெற்றுள்ளன.

**சிற்பக் கலைக்கூடம் - பூம்புகார்**

- இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழர்களின் தலைநகரமாகவும் துறைமுக நகரமாகவும் விளங்கியது பூம்புகார். இந்நகரைப் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்திலும் பட்டினப்பாலையிலும் இடம்பெற்றுள்ளன. இங்கு **மருவூர்ப்பாக்கம்** என்னும் கடல் பகுதியும் **பட்டினப்பாக்கம்** என்னும் நகரப் பகுதியும் அமைந்திருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. பின்னர் ஏற்பட்ட கடல்கோளினால் பூம்புகார் நகரம் அழிந்துவிட்டது, இந்நகரத்தின் பெருமையை உலகறியச் செய்ய கி.பி.(பொ.ஆ.) 1973 ஆம் ஆண்டு பூம்புகார் கடற்கரையில் சிற்பக் கலைக்கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இக்கூடம் ஏழுநிலை மாடங்களைக் கொண்டது. கண்ணகியின் வரலாற்றை விளக்கும் நாற்பத்தொன்பது சிற்பத் தொகுதிகள் இதில் இடம்பெற்றுள்ளன. மாதவிக்கும் ஒரு நெடிய சிலை இங்கு நிறுவப்பட்டுள்ளது.